

கரூர் சட்டமன்றத் தொகுதி கழக இளைஞர் அணி சார்பில், இந்தித் திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், மக்களவை தொகுதிகள் சீரமைப்பில் அநீதி இழைத்திடும் ஒன்றிய அரசை கண்டித்து, மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம், கரூர் பசுபதி பாளையம் உதயநிதி திடலில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, எழுத்தாளர் சூர்யா சேவியர், தலைமை கழக இளம் பேச்சாளர் சண்முகவள்ளி சிறப்புரையாற்றினர். இந்த கண்டனப் பொதுக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் பொதுமக்கள் வெள்ளமென திரண்டு கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம் கிச்சிப்பாளயத்தில். 42, 43வது கோட்ட கழகத்தின் சார்பில் கழக தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் மற்றும் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கழக கொள்கைபரப்பு செயலாளர் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர். திண்டுக்கல் லியோனி கலந்து கொண்டு பேசினார். மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி, பி.ஏ.ஆர். இளங்கோவன், ஈ.ஜி.சுகவனம். ஜி.கே. சுபாசு, கே.டி.மணி, தாமரைக்கண்ணன், பி.கே. பாபு, பா.ரகுபதி, வி.கணேசன், எம்.எம்.ஷெரீப், நவீன், கே. ஜெய், ஜி.வெங்கடேசன், சத்தியன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

# அங்கன்வாடிகளுடன் கூடிய குழந்தை காப்பகங்களின் செயல்பாடுகள் என்ன?

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 24-

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சரிடம் திமுக நாடாளுமன்ற குழுத் தலைவரும், திமுக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி பின்வரும் கேள்விகளை எழுத்து பூர்வமாக எழுப்பியிருந்தார்.

"2017 இல் தொடங்கப்பட்ட தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டத்தின் கீழ் செயல்படும் குழந்தைகள் காப்பகங்களின் எண்ணிக்கை விவரங்கள், அவற்றின் திறன் மற்றும் அவற்றால் பயனடையும் குழந்தைகளின் எண்ணிக்கை, மாநில மற்றும் யூனியன் பிரதேச வாரியாக எவ்வளவு?

வேலை செய்யும் பெற்றோருக்கான பயன்பாட்டை உறுதி செய்வதற்காக, குறிப்பாக கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில், குழந்தைகள் காப்பக உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

பெண் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரிக்க, தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் பகுதிகளில் குழந்தைகள் காப்பகங்களை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

50 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்கள் வளாகத்தில் குழந்தை காப்பக வசதியை வழங்குவதை கட்டாயமாக்கி, அதற்கான செலவுகளை அந்த நிறுவனத்தின் உரிமையாளரே ஏற்க வேண்டும் என 2017 ஆம் ஆண்டு மகப்பேறு நலச் சட்டத்தில் (MBA) திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன் தாக்கம் குறித்து அரசாங்கம் ஏதேனும் மதிப்பீட்டை நடத்தியதா? அப்படியானால், அத்தகைய மதிப்பீட்டின் கண்டுபிடிப்புகள் என்ன?" ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. கேட்டிருந்தார்.

இக்கேள்விகளுக்கு எழுத்துபூர்வமாக பதிலளித்த பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் சாவித்ரி தாக்கூர்,

"வேலை செய்யும் தாய்மார்களின் குழந்தைகளுக்கான, முந்தைய 'தேசிய குழந்தை காப்பகத் திட்டம் (NCS)', பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் 01.01.2017 முதல் 31.03.2022 வரை ஒன்றிய நிதியுதவி திட்டமாக செயல்படுத்தப்பட்டு வந்தது.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தை காப்பகங்கள் இயக்கப்பட்டன. நிதி ஆயோக்கின் வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகத்தின் (DMEO) அறிக்கையின்படி, பெரும்பான்மையான மாநிலங்கள் தனித்த குழந்தை காப்பகங்களுக்குப் பதிலாக அங்கன்வாடியோடு இணைந்த குழந்தை காப்பகங்களை (AWCC) நடத்த விரும்புவதாக வலியுறுத்தியுள்ளன.

ஏனெனில் கூடுதல் திட்டத்தை செயல்படுத்துவதால் ஏற்படும் நிதி, மனிதவளம் மற்றும் நிர்வாகச் சுமையை அதிகரிக்கிறது என்று மாநிலங்கள் கருதின.

இதன்படி மிஷன் சக்திக்கான செலவின நிதிக் குழுவின் (EFC) போது நிதி அமைச்சகம், குழந்தை பராமரிப்பு மையங்களை அருகிலுள்ள அங்கன்வாடி மையங்களுடன் இணைத்து, AWCC களாக நடத்தலாம் என்று பரிந்துரைத்தது.

இதையடுத்து குழந்தைகளுக்கு பகல்நேர பராமரிப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பை வழங்குவதற்காக, ஏப்ரல் 01, 2022 முதல் அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கும் மிஷன் சக்தியின் கீழ் 'பால்னா துணைத் திட்டத்தை' அமைச்சகம் அறிமுகப்படுத்தியது.

அன்றாடம் சிறந்த கண்காணிப்பு மற்றும் சரியான செயல்படுத்தலை உறுதி செய்வதற்காக மாநில, யூனியன் பிரதேச அரசாங்கத்தின் பங்களிப்பை உறுதி செய்யும் ஒன்றிய நிதியுதவி திட்டமாக பால்னா திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும் இது ஒன்றிய மற்றும் மாநில அரசாங்கங்கள் இடையே 60:40 நிதி விகிதத்துடன் செயல்படுத்தப்படுகிறது. அதே நேரம் சிறப்பு அந்தஸ்து கொண்ட மாநிலங்கள் மற்றும் வட கிழக்கு மாநிலங்களுக்கு இந்த பங்களிப்பு விகிதம் 90:10 ஆகும். சட்டமன்றம் இல்லாத யூனியன் பிரதேசங்களுக்கு, 100% நிதியுதவி ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது.

அங்கன்வாடி மையங்கள் உலகின் மிகப்பெரிய குழந்தை பராமரிப்பு நிறுவனங்களாகும், அவை குழந்தைகளுக்கு அத்தியாவசிய பராமரிப்பு மற்றும் ஆதரவை வழங்குவதற்கும், கடைசி மைல் வரை பராமரிப்பு வசதிகளை வழங்குவதற்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

முதன்முறையாக பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் அங்கன்வாடி மற்றும் குழந்தை பராமரிப்பு மையங்கள் மூலம் குழந்தை பராமரிப்பு சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது. இது முழு நாளும் குழந்தை பராமரிப்பினை உறுதி செய்யும். பாதுகாப்பான சூழலில் அவர்களின் நல்வாழ்வை உறுதி செய்யும்.

அங்கன்வாடி மற்றும் குழந்தை பராமரிப்பு மைய முயற்சி பொருளாதாரத்தில் பெண்களின் பணிப் பங்களிப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பால்னா திட்டத்தின் நோக்கம், 6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து ஆதரவு, சுகாதாரம் மற்றும் குழந்தைகளின் அறிவாற்றல் வளர்ச்சி, வளர்ச்சி கண்காணிப்பு, நோய்த்தடுப்பு ஆகிய சூழலில் தரமான குழந்தை பராமரிப்பு வசதியை வழங்குவதாகும்.

பால்னாவின் கீழ் குழந்தை பராமரிப்பு மையங்கள், தாய்மார்களின் வேலைவாய்ப்பு நிலையைப் பொருட்படுத்தாமல் அனைத்து தாய்மார்களுக்கும் வழங்கப்பட வேண்டும்,

குழந்தை காப்பகங்களை நிறுவுதல் மற்றும் இயக்குவதற்கான திட்டங்கள் அந்தந்த மாநில அரசுகள், யூனியன் பிரதேச நிர்வாகங்களிடமிருந்து பெறப்படுகின்றன, அவை இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அவற்றின் தொடர்புடைய பங்களிப்பை வழங்குவதற்கும் பொறுப்பாகும்.

15வது நிதிச் சுழற்சியின் போது, பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் மொத்தம் 17,000 குழந்தை காப்பகங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன, அவற்றில் 11 ஆயிரத்து 395 குழந்தை காப்பகங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பால்னா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 600 அங்கன்வாடியுடன் கூடிய குழந்தை காப்பகங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 2025 நிலவரப்படி தமிழ்நாட்டில் 111 தனித்த குழந்தை காப்பங்கள் செயல்படுகின்றன. இவற்றின் மூலம் 2,115 பேர் பயன் பெறுகிறார்கள்.

மகப்பேறு நலச் சட்டம் பெரும்பாலும் மாநில அரசுகள் செயல்படுத்துவதற்கான சட்டமாகும். இச்சட்டத்தின் பிரிவு 11A, ஐம்பது அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட ஒவ்வொரு நிறுவனத்திலும் குழந்தை காப்பக வசதியை கட்டாயமாக்குகிறது. இச்சட்டத்தின் தாக்கம் குறித்த அத்தகைய மதிப்பீடு எதுவும் ஒன்றிய அரசால் செய்யப்படவில்லை" என ஒன்றிய இணையமைச்சர் பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

## கல்வராயன் மலை – வெள்ளி மலையில்

# 110 கி.வோ.துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?

## சட்டப் பேரவையில் சங்கராபுரம் – தா.உதயசூரியன் கேள்வி!



சென்னை, மார்ச் 24-

சட்டப் பேரவையில் சங்கராபுரம் தொகுதி உறுப்பினர் தா.உதயசூரியன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் செந்தில் பாலாஜி அளித்த பதிலும் வருமாறு:-

**தா. உதயசூரியன்:** கல்வராயன் மலையில் உள்ள வெள்ளிமலையில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**அமைச்சர் செந்தில் பாலாஜி:** கல்வராயன்மலையிலுள்ள வெள்ளிமலை பகுதியின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய தற்போது இயக்கத்திலிருக்கும் எடுத்தவாய்நத்தம் 110 KV துணை மின் நிலையமே போதுமானது. எனவே, வெள்ளிமலை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை

**தா. உதயசூரியன்:** முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அமைச்சர் அவர்கள், எடுத்தவாய்நத்தம் துணை மின் நிலையத்திலிருந்து கல்வராயன் மலையிலுள்ள வெள்ளிமலைக்கு மின்சாரம் வழங்கப்படுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். கல்வராயன் மலை முழுவதும் சேராப்பட்டு என்றும், வெள்ளிமலை என்றும் உள்ளது. ஆகவே, சங்கராபுரம் அருகில் இருக்கின்ற புதுப்பட்டு துணை மின் நிலையத்திலிருந்து 2 feeders; ஒன்று, இன்னாடு மற்றொன்று சேராப்பட்டு; அதேபோன்று, சேலம் மாவட்டம், தும்பலிலுள்ள சேலூர், கொட்டப்புத்தூர் ஆகிய 2 feeders; மேலும், அமைச்சர் சொல்வதைப் போன்று எடுத்தவாய்நத்தத்திலிருந்து பரிகம் feeder மற்றும் துரூர் feeder; இந்த 6 feedersலிருந்துதான் கல்வராயன்மலைக்கு மின்சாரம் செல்வது வழக்கம். ஆகவே, இதற்கு முன்னர் அங்குள்ள மலைவாழ் பழங்குடியின மக்கள், சிறு தானியங்களான சாமை, தினை, வரகு போன்றவற்றைத்தான் விளைவித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், தற்போது, வாழை, கரும்பு, பாக்கு போன்றவற்றை அதிகமாக விளைவிக்கின்ற சூழல் இருக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதில் குறைந்த மின்னழுத்தம் பிரச்சினை ஏற்படுகின்ற காரணத்தினால், கல்வராயன்மலையிலுள்ள வெள்ளிமலையில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்து மறுபரிசீலனை செய்து, இந்த நிதியாண்டிலேயே துணை மின் நிலையம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் வி. செந்தில்பாலாஜி:** கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 3 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார். உறுப்பினர் அவர்கள், கல்வராயன்மலை வெள்ளிமலையில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென கோரிக்கை வைத்திருக்கிறார். அதுகுறித்து துறை சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, தேவை ஏற்படின் இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

**தா. உதயசூரியன்:** முதலமைச்சர் அவர்கள் 2006 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக, துணை முதலமைச்சராக இருந்தபோது, ஐயா தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அப்போது அந்த மலைவாழ் மக்கள் வசிக்கக்கூடிய 37 கிராமங்களுக்கு மின்சார வசதி இல்லை. ஆகவே, முதலமைச்சராக இருந்த ஐயா கலைஞர் அவர்களிடமும், துணை முதலமைச்சராக இருந்த நம்முடைய தற்போதைய முதலமைச்சர் அவர்களிடமும் சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே அந்த கிராமங்கள் மின்சார வசதியின்றி இருக்கின்றன என்பதால், அந்த 37 கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அதனடிப்படையில், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கிராம மின்மயமாக்கல் திட்டத்தின் மூலமாக 37 கிராமங்களுக்கும் சுமார் 40 மின்மாற்றிகளை உருவாக்கித் தந்து, அந்த மலைவாழ் மக்களின் வீடுகளுக்கு மின்சார வசதி கொடுக்கப்பட்டது. ஆனால், மின்மாற்றி கள் 16 MVA, 25 MVA என்ற அளவில் அமைக்கப்பட்டு, ஒரே ஓரிடத்தில் மட்டும் 63 MVA அளவிலான மின்மாற்றி இருக்கிறது. தற்போது, 16 MVA, 25 MVA ஆக இருப்பவற்றையெல்லாம் 63 MVA ஆக மாற்றித் தந்தால், மின்னழுத்தத் தாழ்வு பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கும்.

கடந்த 10 ஆண்டுக்கால ஆட்சியில் அந்த மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது 45 தான். ஆனால், இந்த 4 ஆண்டுக் காலத்தில் திராவிட மாடல் ஆட்சியில், சுமார் 156 இலவச மின்சார பம்பு செட்டுகள் இணைப்பு மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குக் காரணம், எடுத்தவாய்நத்தத்திலிருக்கிற துணை மின் நிலையத்திலிருந்து Power Transformerன் திறன் 10 MVA யிலிருந்து 16 MVA ஆக தரமுயர்த்தப்பட்ட காரணத்தாலும், சங்கராபுரத்திலிருக்கிற துணை மின் நிலையத்திலிருந்த Power Transformerன் திறன் 16 MVA யிலிருந்து 25 MVA ஆக தரமுயர்த்தப்பட்ட காரணத்தினாலும்தான் சுமார் 156 இலவச மின் இணைப்புகள் மலைவாழ் பழங்குடியின மக்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆகவே, எனது கோரிக்கையை மறுபரிசீலனை செய்து, கல்வராயன்மலை வெள்ளிமலையில் ஒரு துணை மின் நிலையத்தை அமைத்துத் தருவதற்கு அமைச்சர் முன்வருவார்களா?

**அமைச்சர் வி. செந்தில்பாலாஜி:** முதலமைச்சர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில், கடந்த 4 ஆண்டுகளில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மட்டும் 1,371 மின்மாற்றிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. அதில் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதியில் 222 புதிய மின்மாற்றி கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள வெள்ளி மலை பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்து துறை சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, தேவை ஏற்படின் இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும் தெரிவித்துக் கொள்கிறேன்.


இப்போழுது அதனைக் கொடுத்துவிடலாம். அதற்கான விண்ணப்பங்களைத் தனியாக அளிக்க வேண்டும். நீங்கள் regular seniorityல் பதிவு செய்திருந்தால், அந்த விண்ணப்பங்கள் அதில் கணக்கு எடுத்துக் கொள்ளப்படும். எனவே, ஏற்கெனவே மின் இணைப்பு பெறாமல் இருந்தால், முன்னுரிமை அடிப்படையில் ஒரு மின் இணைப்பு மட்டும்தான் வழங்கமுடியும். நீங்கள் 3 இணைப்பு கேட்டிருந்தால், அதில் மீதி இரண்டு விண்ணப்பங்களுக்கு seniorityல்தான் வரும். எனவே, அந்த ஒரு மின் இணைப்பை முன்னுரிமை அடிப்படையில் அளிப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## மாவட்ட முன்னாள் கவுன்சிலர்

# காடாம்புலியூர் முத்து.கோதண்டராமன் மறைவு!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – சி.வெ.கணேசன் அஞ்சலி!



கடலூர், மார்ச். 24-

கடலூர் மாவட்ட திமுக முன்னாள் கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் எம்.கே. கதிரவன் மற்றும்கடலூர் மாவட்ட அரசு வழக்கறிஞர் எம்.கே.ராமன் அவர்களின் தந்தையார் பண்ருட்டி காடாம்புலியூர் முன்னாள் மாவட்ட கவுன்சிலர், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் முத்து.கோதண்டராமன் மறைவெய்தினார்.

அவரது உடலுக்கு கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் இறுதிமரியாதை செலுத்தினார்கள்.

மேலும் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. ராஜேந்திரன், கட லூர்மா நகர திமுக செயலாளர் கே.எஸ். ராஜா, பண்ருட்டி நகர மன்ற தலைவர் ஆர். ராஜேந்திரன், வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் குறிஞ்சிப்பாடி வி. சிவகுமார், திருமுட்டம் தங்க. ஆனந்தன், கடலூர் வடக்கு தனஜெயன், தெற்குவிஜய சுந்தரம், அண்ணா கிராமம் வெங்கட்ராமன், மாவட்ட துணை செயலாளர்கள் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், குறிஞ்சிப் பாடி கே.பி.ஆர் பாலமுருகன், நெய்வேலி பொ. புகழேந்தி, அண்ணா கிராமம் பலராமன், தமிழ்ச்செல்வன், ஜி. கார்த்திகேயன், அ.ஜாபர் அலி, கதிர்காமன் மற்றும் கழக நிர்வாகிகள் மறைந்த முத்து.கோதண்டராமன் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஒன்றியத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சமுதாய வளைகாப்பு விழா, ஒன்றிய குழு பெருந்தலைவர், கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், சத்தியமூர்த்தி. தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சின்னசேலம் அட்மா குழு தலைவர், தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கனகராஜ் முன்னிலை வகித்தார். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் அகிலா அனைவரையும் வரவேற்றார். இதில் கர்ப்பிணி தாய்மார்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



வல்லம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தென்புத்தூரில் நடந்த முதலமைச்சர் பிறந்தநாள் விழா சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசினார். உடன் கழக முன்னணியினர் கலந்துகொண்டனர்.